சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசுத் தேர்வுகள் இயக்ககம் – இடைநிலை / மேல்நிலைப் (முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு) பொதுத் தேர்வுகள், புதிய தேர்வு மையங்கள் அமைத்திட அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை

அரசாணை (1டி) எண்.602

நாள் : 11.10.2017.
திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், புரட்டாசி 25,

படிக்கப்பட்டவை :-

1. தமிழ்நாடு அரசாணை எண்.641, கல்வி, அறிவியல் & தொழில்நுட்ப துறை, நாள்.08.04.82.
2. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த்துறை, நாள்.22.05.2017.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க. எண்.160072/ எச்.1/2017, நாள். 04.10.2017

-----

ஆணை:

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒவ்வொரு வருடமும் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ள பள்ளிகளில் தேர்வு மையம் அமைப்பது அவசியம் என்ற நிலை இருந்தால், இடைநிலைத் தேர்விற்கு வருவாய் மாவட்டத்திற்கு மூன்று அல்லது நான்கு புதிய தேர்வு மையங்களும் மேல்நிலைப் பொதுத் தேர்விற்கு 2 புதிய தேர்வு மையங்களும் அமைக்க அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, புதிய தேர்வு மையம் கோரும் பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, அப்பள்ளியில் உள்ள இட/இருக்கை வசதி, பள்ளி அங்கீகாரம், மாணவர்கள் தேர்வு மையத்திற்கு பயணம் செய்யும் தொலைவு, இணைப்புப் பள்ளி, பழைய தேர்வு மையத்தில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய தேர்வு மையங்கள் அமைக்க தேர்வுகள் துறை இயக்குநர் மட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

2. இத்னைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத் தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வழங்கப்பட்டுள்ளது. –

3. இதனைத் தொடர்ந்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில், புதிய தேர்வு மையங்கள் அமைத்திட, தற்பொழுது உள்ள பள்ளிகளில் +1 பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை, ஏற்கனவே உள்ள +2 தேர்வு மையத்திலேயே +1 தேர்வு மையமும் அமைக்கப்பட்டால், மாணவர்கள் பயணம் செய்ய வேண்டிய தொலைவு குறித்து ஆய்வு செய்ததில், மாணவர்கள் 10கி.மீக்கும் அதிகமான தூரம் பயணம் செய்து தேர்வெழுத வேண்டிய நிலை உள்ளது என்றும், இந்த ஆண்டு முதல் 11 ஆம் வகுப்பிற்கும் மாநில அளவில்

பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதாலும், அதன் பொருட்டு அதிக எண்ணிக்கையில் தேர்வு மையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாலும், விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசாணை பெறுவது அவசியமாகிறது என தெரிவித்துக் கொண்டு புதிய தேர்வு மையங்கள் அமைத்திட அரசாணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், 2018 முதல், 11–ஆம் வகுப்பிற்கும் மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதால் அதிக எண்ணிக்கையில் தேர்வு மையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாலும், கீழ்க்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, புதிய தேர்வு மையங்கள் அமைத்திடக் கருதி அரசு அவ்வாறே ஆணையிடுகிறது :–

(i) 10, 11 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு புதிய மையம் அமைக்கக் கோரும் பள்ளிக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் நேரிடையாகச் சென்று பார்வையிட்டு, அப்பள்ளி தேர்வு மையமாக செயல்படுவதற்கான உள்கட்டமைப்பு வசதியும் ( இட/ இருக்கை வசதி, கழிவறை வசதி உள்ளிட்டவை), மாணவர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் எளிதில் வந்து செல்லக்கூடிய வசதியும் உள்ள பள்ளியாக இருந்து புதிய தேர்வு மையம் அமைக்க அவசியம் இருப்பின் பரிந்துரை செய்ய வேண்டும்.

(ii) தோராயமாக 10 கி.மீ தொலைவு பயணம் செய்து பொதுத்தேர்வெழுதும் மாணவர்களுக்கு புதிய தேர்வு மையம் அமைக்கலாம்.

(iii) புதிய தேர்வு மையம் கோரும் பள்ளி அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியாக (தொடர் அங்கீகாரத்தில்) இருக்க வேண்டும். மாணவர்கள் தேர்வெழுதும் (Feb-April) நாளில் பள்ளியின் தொடர் அங்கீகாரம் முடிவு பெறாமலும், முடிவு பெற்ற நிகழ்வுகளில் தொடர் அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டும் இருக்க வேண்டும்.

(iv) புதிய மையமாக அமைக்கப்படும் பள்ளியில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 20 பேர் அமரக்கூடிய இட வசதியுள்ள அறைகள் (20''x20'') மற்றும் இருக்கை வசதிகள் இருத்தல் வேண்டும்.

(v) ஏற்கனவே தேர்வு மையமாக செயல்பட்டு வரும் பள்ளியில் தேர்வெழுதும் மாணவர்களின் எண்ணிக்கை, தேர்வு பணிகளைக் கையாள்வதில் மிகுந்த சிரமத்தினைக் கொடுக்கும் (Unmanageable) நிலையில் இருக்குமேயானால், அதில் இணைப்பு பள்ளியாக செயல்பட்டு வரும் ஏதேனும் ஒரு பள்ளியில், குறைந்தபட்சம் 100–மாணவர்கள் பயின்று, அப்பள்ளி புதிய தேர்வு மையம் வேண்டி விண்ணப்பித்தால், அப்பள்ளியில் இட/இருக்கை வசதிகளைச் சரிபார்த்தபின், அவை சரியாக இருக்கும்பட்சத்தில் புதிய மையம் வழங்கப் பரிந்துரைக்கலாம்.

(vi) புதிய தேர்வு மையத்தில் இணைப்பு பள்ளி கண்டிப்பாக இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மட்டும் விதிவிலக்கு தரப்படலாம். இந்நிகழ்வுகளில் தேர்வு மையத்தில் அவசியம் நிலையான பறக்கும் படையினர் (Standing Squad) நியமிக்கப்பட்டு, தீவிரக் கண்காணிப்பில் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

த.பி.பா.

5. புதிய தேர்வு மையம் கோரும் பள்ளிகள் மந்தணத் தன்மைக்கு ஊறுவிளைவிக்காத வகையில் பாதுகாப்பானதாகவும், நேர்மையான முறையில் தேர்வுகளை நடத்துவதற்கு ஏதுவான வசதிகள் மற்றும் இணைப்புப் பள்ளிகளை கொண்டதாகவும் இருப்பதை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.

<u>நகல் :</u>
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
12/10/17

ந.க.எண். 160072/HF1/2017, நாள். 24.10.2017

மேற்குறிப்பு

அரசாணை (டி) எண். 602, பள்ளிக் கல்வி (ஜி1) த்துறை, நாள். 22.10.17-ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

இணை இயக்குநர் (மேல்நிலை)

பெறுநர்
அனைத்து அரசுத்தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
HS, B, HFA, HS, BT பிரிவுகள் [illegible]